**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வந்தவாசி,**
**திருவண்ணாமலை மாவட்டம்**
**முன்னிலை – திருமதி. செ. மகாலட்சுமி, பி.ஏ., எம்.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, வந்தவாசி.**
**(திருவள்ளுவர் ஆண்டு 2056, விஸ்வாவசு வருடம், ஐப்பசி மாதம் 18 நாள்)**
2025–ம் ஆண்டு நவம்பர் மாதம் 04–ம் நாள் செவ்வாய் கிழமை
**வழக்கிடை மனு எண். 04/2025**
**in**
**அசல் வழக்கு எண். 370/1998**

பெருமாள்நாயுடு ..மனுதாரர்/பிரதிவாதி

–எதிர்–

1. கண்ணப்ப பண்டிதர்,
2. கண்ணம்மாள் ....எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனு இந்நீதிமன்றம் முன்பாக இறுதியாக 29.10.2025 அன்று விசாரணைக்கு வந்து, மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. ஆ. ரமேஷ், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. T.வினாயகம், அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், வழக்காவணங்கள், மனு மற்றும் எதிர் உரை ஆகியவற்றை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## உத்திரவு

கடந்த 17.02.2021ம் தேதி தாக்கல் செய்த ஆணையர் அறிக்கையை நிராகரித்து மீண்டும் அதே வழக்கறிஞர் ஆணையரை நியமனம் செய்து தாவா சொத்தினை தாலுக் சர்வேயர் துணையுடன் பார்வையிட்டு மனுதாரரின் பத்திரப்படியும் மற்றும் வருவாய்துறை ஆவணங்கள்படியும் துல்லியமாக அளந்து அறிக்கை சமர்ப்பிக்க மீண்டும் பார்வையிட ((Revisit) உத்தரவிடுமாறு மனுதாரர்/பிரதிவாதியால் ஆர்டர் XXVI ரூல் 9–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### 2. மனுதாரர் /பிரதிவாதி தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:–

2.1) தான் இந்த மனுவின் மனுதாரர் என்றும், அசல் வழக்கில் பிரதிவாதி என்றும், மேற்படி எதிர்மனுதாரர்கள்/வாதிகள், மனுதாரர்/பிரதிவாதி மீது செயலுறுத்துக்கட்டளை இன்ஜெக்ஷன் மற்றும் நிரந்தர தடை உத்தரவு

பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தாவாவில் தாவா சொத்து அமைவிடத்தை பார்வையிட்டு அதன் அமைப்புகள் குறித்து அறிக்கை சமர்ப்பிக்க வழக்கறிஞர் நியமனம் செய்ய கோரி மனு தாக்கல் செய்து மனுவில் வழக்கறிஞர் ஆணையர் நியமனம் செய்யப்பட்டு, வழக்கறிஞர் ஆணையர் மனு சொத்து இடத்தினை பார்வையிட போவதாக மனுதாரருக்கு அறிவிப்பு கொடுத்து, அதே தேதியில் மனு சொத்தினை பார்வையிட்டார் என்றும், மனு சொத்தினை பார்வையிடும்போது வழக்கறிஞர் ஆணையர் கவனிக்க வேண்டிய சில தகவல்களை மனுதாரர் தரப்பில் குறிப்புகளாக வழக்கறிஞர் ஆணையருக்கு வழங்கப்பட்டதாகவும், மனுதாரர் தரப்பு குறிப்புகள் பற்றி வழக்கறிஞர் ஆணையர் கவலைப்படாமல் மனுதாரரின் கோரிக்கையை நிராகரித்து அவரது குறிப்புகளில் கண்ட அளவுகளை தெளிவுபடுத்தாமல் ஆணையர் தனது அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றும், ஆணையர் தனது அறிக்கையுடன் கூடிய வரைபடம் தாக்கல் செய்துள்ளார் என்றும், அவரது வரைபடத்திற்கும் ஆணையர் வரைபடத்திற்கும் வித்தியாசம் உள்ளது என்றும், நாங்கள் காட்டிய குறிப்புகள் பற்றி அவரது அறிக்கையில் குறிப்பிட்டு நீதிமன்றத்திற்கு தெளிவுபடுத்தவில்லை என்றும், மனுதாரர் ஆவணப்படி அளக்கவில்லை என்றும், இதனால் மனுதாரர் தரப்பில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்பினை கவனத்தில் கொள்ளாமல் வரைபடத்தில் தோராய அளவுகள்படியும் ஆணையர் அறிக்கை சமர்ப்பித்துள்ளார் என்றும், மற்றும் மனுதாரர்/பிரதிவாதி ஆக்கிரமித்து வீடு கட்டி வாழ்ந்து வருவதாக தவறான அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

2.2) மேலும் ஆணையர் அறிக்கையில் பல குளறுபடிகள் உள்ளது என்றும், அதனால் மனுதாரர் தரப்பில் ஆட்சேபனை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், குறிப்பாக மனுதாரர் தரப்பில் கேட்டுக்கொண்ட தகவல்கள் ஆணையர் அறிக்கையில் இடம்பெறவில்லை என்றும், எனவே, ஆணையர் அறிக்கைக்கு எதிராக ஆட்சேபனை மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மனுதாரர் தரப்பில் ஆணையாளரிடம் வழங்கப்பட்ட தகவல்கள் பற்றி அறிக்கை சமர்ப்பிக்கவில்லை என்றும், எனவே, ஆணையர் அறிக்கை துல்லியமாக சமர்பிக்கப்படவில்லை என்று நிராகரிக்கப்படவேண்டும் என்றும், எனவே, தாலுக் சர்வேயர் துணையுடன் தாவா சொத்தினை பார்வையிட்டு சரியான அளவுகளுடன் கூடிய அறிக்கை சமர்ப்பிக்க ஆணையர் ஒருவரை நியமனம் செய்து தாவா சொத்தினை மனுதாரரின் பத்திரப்படியும், வருவாய்துறை ஆவணங்கள்படியும் பார்வையிட்டு துல்லியமாக அளந்து மறு ஆய்வு செய்து துல்லியமான அளவுடன் அறிக்கை

சமர்ப்பிக்க அதே வழக்கறிஞரை நியமனம் செய்து தக்க உத்தரவிட வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**<u>3. 1 எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர் உரையின் சுருக்கம் (2 ம் எதிர்மனுதாரர்/2 ம் வாதிக்காகவும் adopt செய்யப்பட்டுள்ளது:–</u>**

3.1) மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவில் கண்டுள்ள சங்கதிகள் அனைத்தும் தவறானவை என்றும், சட்டப்படி ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல என்றும், மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்துள்ள மனுவில் நீதிமன்ற ஆணையர் தாவா இடத்தை பார்வையிட்டு அதனுடைய அமைப்பு மற்றும் அளவுகள் குறித்தும் சரியான முறையில் பார்வையிட்டு கனம் கோர்ட்டில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றும், அவ்வாறு இருக்க மனுதாரர்/பிரதிவாதி வழக்கறிஞர் கொடுத்த தகவல்களை ஆணையர் கருத்தில் கொள்ளாமல், தெளிவுபடுத்தாமல் அறிக்கையினை கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்று கூறியிருப்பது சரியல்ல என்றும், ஆணையர் தனது அறிக்கையில் வரைபடம் தாக்கல் செய்துள்ளார் என்றும், அதில் வித்தியாசம் உள்ளது என்றும், மனுதாரர்/பிரதிவாதி கொடுத்த குறிப்புகளை அறிக்கையில் குறிப்பிட்டு தெளிவு படுத்தவில்லை என்றும், பிரதிவாதியின் ஆணைப்படி அளக்கவில்லை என்றும், வரைபடத்தில் தோராய அளவுகள் படியும், அறிக்கை சமர்ப்பித்துள்ளார் என்றும், மற்றும் பிரதிவாதி ஆக்கிரமித்து வீடு கட்டி ஆண்டு வருவதாக தவறான தகவல்களை ஆணையர் அறிக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், பிரதிவாதி குறிப்பிட்டிருப்பது தவறான சங்கதிகள் என்றும், மேலும், மனுதாரர்/ பிரதிவாதி தரப்பில் பல குளறுபடிகள் உள்ளது என்று ஆட்சேபனை தாக்கல் செய்யப்பட்டது என்றும், மனுதாரர்/பிரதிவாதி கேட்டுக்கொண்ட தகவல்கள், விவரங்கள் ஆணையர் அறிக்கையில் இடம்பெறவில்லை என்றும், ஆணையர் அறிக்கை துல்லியமாக சமர்ப்பிக்கப்படவில்லை என்றும், அதனால் அறிக்கையை நிராகரிக்க வேண்டிய ஒன்றாகும் என்று எதிர்மனுதாரர் குறிப்பிட்டுள்ளது. சட்டப்படி ஏற்கக்கூடியதல்ல என குறிப்பிடப்பட்டுள்ளது.

3.2) ஆணையர் அறிக்கையில் கண்டுள்ள வரைபடம் பற்றிய அறிக்கை தகவல்கள் தோராயமாக மதிப்பிடப்பட்டுள்ளது என்றும், அதன்படி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றும், அறிக்கையை துல்லியமாக சமர்ப்பித்தால் நீதிமன்றத்திற்கு தெளிவு ஏற்படும் என்பதால், ஆணையரின் அறிக்கையினை நிராகரித்து தாலுக் சர்வேயர் துணையுடன் அறிக்கை சமர்ப்பிக்க ஆணையர்

ஒருவரை நியமனம் செய்து தாவா சொத்தினை மனுதாரர்/ பிரதிவாதியின் பத்திரப்படியும், மற்றும் வருவாய்துறை ஆவணங்கள் படியும் பார்வையிட்டு துல்லியமாக அளந்து மறு ஆய்வு செய்து (Revisit) துல்லியமான அறிக்கையுடன் அறிக்கை சமர்ப்பிக்க அதே வழக்கறிஞரை நியமனம் செய்து உத்தரவு பிறப்பிக்கவேண்டும் என்று எதிர்மனுதாரர்/பிரதிவாதி மனுவில் கூறியிருப்பது ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல என்றும், மேலும், மேற்படி வழக்கு குறித்து நீதிமன்ற ஆணையர் கனம் கோர்ட்டார் உத்தரவுப்படியும், வாதி பிரதிவாதிகள் உபய வழக்கறிஞர்கள் கருத்தினை கேட்டறிந்து, அதன்படியே செயல்பட்டுள்ளார் என்றும், மேலும், நில அளவையரும் பத்திரங்களின்படியே அளந்து காண்பித்துள்ளார் என்றும், மனுதாரர்/பிரதிவாதி தன்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் ஆவணங்கள்படி அளந்து பார்த்து ஆணையர் சரியாக செயல்பட்டு அளவுகளை கவனித்து அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்று ஒப்புக்கொண்டு, தற்போது முன்னுக்குப்பின் முரணாக மீண்டும் தாவா சொத்தினை (Revisit) செய்து வழக்கறிஞர் ஆணையரை நியமனம் செய்து அறிக்கை தாக்கல் செய்யவேண்டும் என்று இம்மனுவில் குறிப்பிட்டிருப்பது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என்றும், மேற்படி வழக்கினை தொடர்ந்து மனுதாரர்/பிரதிவாதி நடத்தவிடாமல் காலம்கடத்த வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில் இதுபோன்று மனுக்கள் தாக்கல் செய்வதாகவும், எனவே, மனுதாரர்/பிரதிவாதி பொய்யான தகவல்களை குறிப்பிட்டு வழக்கினை காலம்கடத்தவேண்டும் என்ற நோக்கத்தோடு மீண்டும் ஆணையரை நியமித்து அறிக்கை தாக்கல் செய்யவேண்டும் என தாக்கல் செய்துள்ள இம்மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று எதிருரையில் குறிப்பிடப்பட்டுள்ளார்.

**<u>4. தற்போது இங்கு தீர்மானிக்கவேண்டிய பிரச்சனை யாதெனில்:–</u>**

மனுதாரர் மனுவில் கோரியுள்ளவாறு ஏற்கனவே வழக்கறிஞர் ஆணையர் தாக்கல் செய்த ஆணையர் அறிக்கையை நிராகரித்து மீண்டும் அதே வழக்கறிஞர் ஆணையரை நியமனம் செய்து தாவா சொத்தை (Revisit) செய்யப்பட வேண்டிய அவசியம் உள்ளதா? இல்லையா என்பதே ஆகும்.

**<u>5. தீர்வு–</u>**

5.1) தாவாவில் கடந்த 17.02.2021ம் தேதி இவ்வழக்கில் நியமிக்கப்பட்ட நீதிமன்ற ஆணயைர் அறிக்கை மற்றும் வரைபடத்தினை நிராகரித்து மீண்டும் அதே நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்து தாவா சொத்துக்களை (Revisit) செய்ய வேண்டுமென்றும், மனுதாரர் மீது எதிர்மனுதாரர்கள் செயலுறுத்துக்கட்டளை நிரந்தர தடை உத்தரவு கோரி அசல் வழக்கு தாக்கல்

செய்துள்ளதாகவும் தாவா சொத்துக்களை அமைவிடத்தை பார்வையிட்டு அதன் அமைப்புகள் குறித்த அறிக்கை தாக்கல் செய்ய வழக்கறிஞர் அணையரை நியமனம் செய்து அதன் அடிப்படையில், வழக்கறிஞர் ஆணையர் தாவா சொத்துக்களை பார்வையிடும்போது மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் அணையர் கவனிக்க வேண்டிய சில தகவல்களை குறிப்புகளாக வழங்கப்பபட்டது என்றும், ஆனால் மேற்படி குறிப்புகளை கருத்தில் கொள்ளாமல் தாவா சொத்துக்களை அளவீடு செய்து அறிக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், ஆணையர் அறிக்கையில் மனுதாரர் ஆக்கிரமித்து வீடு கட்டியுள்ளதாகவும் குறிப்பிட்டு அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி அறிக்கையில் பல குளறுபடிகள் உள்ளதாகவும், வழக்கறிஞர் அணையரின் அறிக்கைக்கு மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளது என்றும், வழக்கறிஞர் ஆணையர் அறிக்கை துல்லியமாக சமர்ப்பிக்கப்படவில்லை என்பதாலும், மனுதாரரின் ஆவணங்களின் அடிப்படையில் அளவீடு செய்யப்படவில்லை என்பதாலும், மேற்படி அறிக்கையை நிராகரித்து மனுதாரரின் பத்திரப்படியும், வருவாய்த்துறை ஆவணங்கள் படியும், அளந்து அறிக்கை தாக்கல் செய்ய அதே வழக்கறிஞர் அணையரை நியமனம் செய்து ரீ விசிட்டிற்கு உத்தரவிடுமாறு மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5.2) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவிற்கு எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த எதிருரையில், மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவில் கண்டுள்ள சங்கதிகள் தவறானவை என்றும், ஏற்கனவே வழக்கறிஞர் ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் வரைபடத்தை நிராகரிக்க வேண்டும் என்று கோரியுள்ளதை ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என்றும், வழக்கறிஞர் ஆணையர் தாவா சொத்துக்களை பார்வையிடும்போது உபய வழக்கறிஞர்களின் கருத்தினை கேட்டறிந்து பத்திரங்கள் படியும், வருவாய் ஆணங்கள்படியும் தாவா சொத்துக்களை அளவீடு செய்ததாகவும், மனுதாரர் /பிரதிவாதி தன்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் ஆவணங்கள்படி அளந்து பார்த்து ஆணையர் சரியாக செயல்பட்டு அளவுகளை கவனித்து அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்று ஒப்புக்கொண்டு தற்போது முன்னுக்குபின் முரணாக இந்த மனுவை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே, தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் வாதிட்டார்.

5.3) இந்த அசல் வழக்கானது கடந்த 1998ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட வழக்காகும் இந்த மனுவில் எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தாவா சொத்துக்களை வழக்கறிஞர் ஆணையர் மூலம் பார்வயைிட்டு அறிக்கை

தாக்கல் செய்வதற்காக அதே ஆண்டில் மனு செய்து, மனுவானது அனுமதிக்கப்பட்டு வழக்கறிஞர் ஆணையர் கடந்த 17.02.2021ம் தேதி அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார் என்பது கோப்புகளின் அடிப்படையில் தெரியவருகிறது. மேற்படி நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கையை பரிசீலனை செய்து பார்த்ததில் ***"இரு தரப்பு வழக்கறிஞர்கள் கொடுத்த குறிப்பின்படி சர்வேயர் மனு சொத்தினை வழக்கறிஞர் ஆணையருக்கு சுட்டிக்காட்டினார் என்றும், மேற்படி தாவா இடத்தினை இருதரப்பினரும் தங்களிடம் உள்ள பத்திரங்களையும் சுட்டிகாட்டி அளக்க வேண்டுமென்றும், அதன் படி அளந்து பார்த்ததில் தாவா இடமானது தெரு வீதிக்கு வடக்கு, நத்தம் காலி இடத்திற்கு தெற்கு, பிரதிவாதி பொது சந்திற்கு கிழக்காகவும், கோவிந்தபிள்ளை காலி மனைக்கு மேற்காகவும் அமைந்திருந்தது என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும், இரு தரப்பினர்களின் பத்திரப்படி அளந்து பார்த்ததில் ஆக்கிரமிப்பு உள்ளதாகவும், வருவாய்துறை ஆவணங்கள் படி அளந்து பார்த்ததில் ஆக்கிரமிப்பு ஏதும் ஏற்படவில்லை என்றும், குறிப்பிட்டு அறிக்கை தாக்கல் செய்துள்ளார். "***

5.4) மேற்படி வழக்கறிஞர் ஆணையர் அறிக்கைக்கு மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கடந்த 17.06.2022-ல் ஆட்சேபனை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆட்சேபனையில் ***"சர்வேயர் அவர்கள் நில அளவுகளை வருவாய்துறை ஆவணங்கள் படிதான் அளவீடு செய்யப்பட வேண்டும், வருவாய் துறை ஆவணங்கள்தான் சர்வேயருக்கு சரியான அளவுகளை காட்டும். மனுதாரர்கள் கூற்றுப்படி பத்திரத்தின்படி அளந்து பார்ப்பதால் உண்மை தெரிய வாய்ப்பில்லை. பத்திரத்தில் எழுதும்பொழுது அளவுகள் மாறுபட வாய்ப்பு உள்ளது அதனால் சர்வேயர் வருவாய்துறை ஆவணங்கள்படி அளந்து அறிக்கை சமர்பிக்கப்படவேண்டும்."*** என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி மனுதாரர் ஆட்சேபனை தாக்கல் செய்த சமயத்திலேயே வழக்கறிஞர் ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடத்தை நிராகரித்து மீண்டும் வழக்கறிஞர் ஆணையரை நியமனம் செய்ய மனு தாக்கல் செய்யாமல் தற்போது இந்த அசல் வழக்கானது வாதிகள் தரப்பில் விசாரணை முடிக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் மனுதாரர்/பிரதிவாதி பி.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டும், பி.வா.சா.2 முதன்மை சாட்சியம் அளித்த பிறகு தற்பொழுது காலம் கடந்து இந்த மனு தாக்கல் செய்திருப்பது ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை. மேலும், ஏற்கனவே வழக்கறிஞர் ஆணையரின் அறிக்கைக்கு மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் அட்சேபனை தாக்கல் செய்த பிறகும் தற்பொழுது இந்த மனு தாக்கல் செய்திருப்பது நீதிமன்றத்தின் நேரத்தை வீணடிப்பதாக உள்ளது. மனுதாரர் தாக்கல் செய்த ஆட்சேபனையில் வருவாய்துறை ஆவணங்கள்படி அளவீடு செய்தால்

அளவீடு சரியாக இருக்கும் என்று குறிப்பிட்டுள்ள பட்சத்தில் தற்போது இந்த மனுவில் பத்திரப்படியும், வருவாய் ஆணங்கள் படியும் மீண்டும் தாவா சொத்துக்களை அளவீடு செய்யவேண்டுமென்று கூறியிருப்பது முன்னுக்குபின் முரணாக உள்ளது.

5.5) மனுதாரர்/பிரதிவாதி வழக்கறிஞர் ஆணையர் வழக்கு சொத்துக்களை பார்வையிடும்பொழுது குறிப்புகள் கொடுத்ததாக கூறியுள்ளார். ஆனால், என்னென்ன குறிப்புகள் கொடுத்தார் என்பதை மனுவில் தெளிவுபட குறிப்பிடப்படவில்லை.

5.6) மனுதாரர்/பிரதிவாதி அவரது வழக்கினை தகுந்த சாட்சி மற்றும் சான்றாவணங்கள் வாயிலாக நிரூபணம் செய்யவேண்டும். அசல் வழக்கு 1998 ஆம் ஆண்டு தாக்கல் செய்து தற்பொழுது பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.2–ஐ குறுக்கு விசாரணை செய்வதற்காக நிலுவையில் உள்ள நிலையில் கடந்த 17.02.2021ம் தேதி தாக்கல் செய்யப்பட்ட நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடத்தை நிராகரித்து மீண்டும் தாவா சொத்துக்களை பார்வையிட வழக்கறிஞர் ஆணையர் நியமனம் செய்யக் கோரியிருப்பது ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை. மேலும், ஏன் காலதாமதமாக இம்மனு தாக்கல் செய்யப்பட்டது என்பதற்கான விளக்கத்தினை தெரிவிக்கவில்லை.

5.7) வழக்கறிஞர் ஆணையரின் அறிக்கை மூலம் சொத்தின் உரிமை மூலத்தினையோ உடைமை மூலத்தினையோ தீர்மானிக்க இயலாது. எனவே, அசல் வழக்கு கடந்த 25 ஆண்டுகளாக நிலுவையில் இருந்து வருவதாலும், கடந்த 2021ம் ஆண்டில் வழக்கறிஞர் ஆணையர் அறிக்கை தாக்கல் செய்து 4 ஆண்டுகள் கழித்து மேற்படி நீதிமன்ற ஆணையரின் அறிக்கையை நிராகரித்து மீண்டும் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய கோரி இருப்பது ஏற்றுக்கொள்ள கூடியதாக இல்லை. இம்மனுவின் தன்மை சூழ்நிலைகளை கருத்திற்கொண்டு இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**6. முடிவாக,**

**இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.**
**செலவுத் தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் படித்து பார்த்து

பிழை திருத்தம் செய்யப்பட்டு, 2025ம் ஆண்டு நவம்பர் திங்கள் 04–ம் நாள் இந்நீதிமன்றத்தின் அவையறியப் பகரப்பட்டது.

(ஒம்) செ. மகாலட்சுமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வந்தவாசி.

**மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** – இல்லை.
**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** –இல்லை.

(ஒம்) செ. மகாலட்சுமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வந்தவாசி.